9. அறிவிப்புகள்

(அ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல்–கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்காக பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு* (Committee on Estimates), *பொதுக் கணக்குக் குழு* (Committee on Public Accounts), *பொது நிறுவனங்கள் குழு* (Committee on Public Undertakings), *அவை உரிமைக் குழு* (Committee of Privileges) *ஆகியவற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள், வேட்புத் தாள்களை 2018 ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 4 ஆம் நாள், புதன்கிழமை நண்பகல் 12–00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள்களை சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.*

வேட்புத் தாள்கள், 2018 ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள் 4 ஆம் நாள், புதன்கிழமை பிற்பகல் 4–00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், 2018 ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள் 5 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

பிற்பகல் 12–45

(ஆ) தமிழ்நாடு காமன்வெல்த் பாராளுமன்ற தமிழகக் கிளையின் சிறப்புப் பொதுக் குழுக் கூட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு காமன்வெல்த் பாராளுமன்ற தமிழகக் கிளையின் சிறப்புப் பொதுக் குழுக் கூட்டம் 4–7–2018 புதன்கிழமை மாலை 4–00 மணியளவில் சென்னை–2, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கான விடுதியில் அமைந்துள்ள குழுக் கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.*